எல்லாம் சென்ற காலத்தில் ஒற்றிவைக்கப்பட்டிருந்தது. அல்லது அவை மெதுவாக வசூலிக்கப்படவேண்டும் என்ற முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்திருந்தது.

ஆனால், சமீபத்தில் இப்போது இரண்டு வார காலமாக ஜப்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு பழைய கடன் பாக்கிக்காக விவசாயிகளின் பம்ப்செட்சை ஜப்தி செய்வது, மாடுகளை ஜப்தி செய்வது என்று பல கிராமங்களில் நெருக்கடியான ஒரு நிலையை உண்டுபண்ணியிருப்பது மட்டுமல்லாமல் வேளாண்மை உற்பத்திக்கும் அதனால் இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு கிராமத்தில் ராமசாமி என்பவர் வீட்டிலிருந்து பால் மாட்டை ஜப்தி செய்திருக்கிறார்கள். அதன் கன்று வீட்டில் இருக்கிறது அதுகூட இரண்டு மூன்று நாட்களில் இறந்துவிடும் நிலையில் இருக்கிறது. என்று கடிதம்கூட எழுதியிருக்கிறார். ஐந்து விவசாயிகளை பழைய பாக்கிக்காகத் தண்ணீர் இறைக்க விடாமல், விவசாயம் செய்ய விடாமல் தடுத்திருக்கிறார்கள். எழும்புவனம் என்ற இடத்தில் காளிமுத்து செட்டியார் இறைவை இறைத்துக்கொண்டிருக்கும்போது அவர் மாடுகளை ஜப்தி செய்துகொண்டு போய்விட்டார்கள். அவருக்குள்ளதே ஒரு ஜோடி மாடு. போர்ட் ஸ்டான்டிங் ஆடர்படி ஒரு ஜோடி உழவு மாடு வைத்திருந்தால் அப்படி ஜப்தி செய்யக்கூடாது என்று இருக்கிறது. அவர் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும்போதே ஜப்தி செய்துகொண்டு போயிருக்கிறார்கள்.

இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் பலயிடங்களில் மார்ச் மாதம் சில தொகை கட்டியிருக்கிறார்கள். ஆனால் பூராத் தொகையையும் கட்ட வேண்டுமென்று ஜப்தி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு பூராவிலும், வரட்சிப் பகுதிகளல்! செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை யெல்லாம் , நிறுத்தி வைக்கப்பட்ட தொகை பூராவும் இப்போதே செலுத்தியாகவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தக்கூடிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

கோவில்பட்டி தாலூகாவில் இந்த ஆண்டு ஓரளவிற்கு மழை பெய்திருந்தாலும் கைக்கு வரவேண்டிய மகசூல் இன்னும் வந்து சேரவில்லை. ஆனால் பாக்கித் தொகை பூராவையும் கட்டிவிட வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். ஏற்கெனவே இதுபற்றி நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அந்த நடவடிக்கைகளை நிறுத்துவதாக இல்லை. அரசாங்கம் வசூலிக்கச் சொல்லுகிறது என்று கெடுபிடி செய்து வசூலிக்கிறார்கள். தோட்டங்களில் சென்டா நட்டுவிட்டால் தண்ணீர் இறைக்க முடியாது. அந்த நிலையில் கால் பங்குகூட மகசூல் வராது. தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும்போது பம்ப்செட்டை ஜப்தி செய்துவிட்டால், மாடுகளை ஜப்தி செய்துவிட்டால் கையிலுள்ள காசு பூராவையும் புன்செய்யில் கொட்டி வரக்கூடிய வருமானம் அறவே போய்விடும் நிலைமை உள்ளது. அதனால் வேளாண்மை வளர்ச்சியும் பாதிக்கப்படும். விவசாயிகளும் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாவார்கள். கொடுவட்டியில் கடன் கொடுத்துள்ள லேவாதேவிக்காரர்கள்கூட மகசூல் வந்து விற்கக்கூடிய சமயத்தில்தான் போவார்கள். அப்படியிருக்க அதி

காரிகள் மகசூல் வராத நேரத்தில், முக்கால்வாசியிருக்கும்போது சென்டால் நட்டு பணத்தைக் கட்டிவிட்டுத்தான் காட்டில் இறங்க வேண்டும், பின்னர்தான் மகசூல் எடுக்கவேண்டும், பணத்தைக் கட்டிவிட்டுத்தான் தண்ணீர் இறைக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னால் அது விவசாயிகளுக்குப் பெரியதொரு நெருக்கடியான நிலையை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை நிறுத்தச் சொல்லி அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி வசூல் செய்யக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடன் சம்பந்தமாக நிவாரண நடவடிக்கைகள்கூட கொண்டுவருவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நாலைந்து ஆண்டுகளாக உரத்திற்காகக் கடன் வாங்கி உரங்கள் வாங்கிப்போட்டும் மழை இல்லாததால் எல்லாம் கெட்டுவிட்டன. கடன் வாங்கி கிணறுகள் வெட்டியும் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே எவை எவை எல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும். எவை எவையில் எப்படி வசூலிக்கவேண்டும் என்பதையெல்லாம் நன்கு பரிசீலித்து வசூல் செய்ய நடவடிக்கை எடுப்பது என்பதுடன், இந்தக் கெடுபிடி நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக மின் இணைப்பைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சில இடங்களில் மின் இணைப்பைத் திடீரென்று துண்டித்துவிட்டு இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில்,1965 ம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ந்து மின் இணைப்புக் கட்டணம் கட்டிக்கொண்டிருப்பவர்களுக்குக்கூட, பம்புசெட் ரூமில் லைட் எரிந்தது என்று சொல்லி, ஒவ்வொரு விவசாயியும் அபராதமாக ரூ. 100, ரூ. 200 கட்டவேண்டுமென்று சொல்லி, மின் இணைப்பைத் துண்டித்து இருக்கிறார்கள். விவசாயிகள் உணவு உற்பத்தியைப்பெருக்குவதற்காகப் பல்வேறு வசதிகளை நாம் செய்து தருகிறோம். அவர்கள் இப்படி உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு வருகிற நேரத்தில், அதற்கு இடைஞ்சலாக இந்தமாதிரிக் காரியங்களில் ஈடுபடுவது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எஸ். கணேசன்:—பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். மானியம் எண் 9–எ என்ற பிரிவில் ஹிந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகத்திற்காக, நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு அறநிலையத் துறையிலே நிர்வாகத்திற்கு உட்படாது இருக்கும் பல்வேறு அறக்கட்டளைகளை அந்த நிறுவனத்தின் கீழ்க் கொண்டுவதற்குக் கூடுதல் பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்ற கருத்து அதிலே அடங்கியிருக்கிறது. நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இப்படி அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் கடந்த ஒரு ஆண்டு காலத்தில் சர்வே செய்து ஏறத்தாழ 1,59,322,27